செ.வெ.எண்: 307 நாள்: 4.07.2017

ந.க.எண்.4688/2017/S1
நாள்: 4.07.2017.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

## பத்திரிக்கை செய்தி

### ஆதார் எண், புகைப்படம் பதிவேற்றம் செய்ய சிறப்பு முகாம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 01.04.2017 முதல் அச்சிடப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக மின்னனு குடும்ப அட்டைகள் (**SMART CARD**) வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது மாவட்டத்தில் 6,55,046 குடும்ப அட்டைகள் வழக்கத்தில் உள்ளன. மாவட்டம் முழுவதும் 2,78,530 மின்னனு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ளவர்களுக்கு மின்னனு குடும்ப அட்டைகள் அச்சடித்து வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. குடும்ப அட்டைதாரர்களின் புகைப்படங்கள் தெளிவில்லாமல் இருப்பதாலும் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரது ஆதார் எண் குடும்ப அட்டையுடன் இணைக்கப்படாமல் இருப்பதாலும் ஸ்மார்ட் கார்டுகள் அச்சடிக்க காலதாமதமாகிறது. எனவே மின்னனு குடும்ப அட்டை உடனடியாக அச்சடித்து வழங்கிட ஆதார் எண் இணைப்பு மற்றும் குடும்பத் தலைவர் புகைப்படம் சேகரிக்கும் பணி தற்போது அந்தந்த நியாயவிலைக்கடைகளில் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை தனிக்கவனம் செலுத்தி விரைந்து முடிக்க 06.07.2017 முதல் 13.07.2017 வரை (7.07.2017 வெள்ளிக்கிழமை நீங்கலாக) அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. அச்சமயம் தினசரிப் பணிகளோடு ஆதார் எண் இணைத்தல் மற்றும் புகைப்படம் பெறும் பணியினையும் விற்பனையாளர்கள் மேற்கொள்வர். எனவே இதுவரை மின்னனு குடும்ப அட்டை வரப்பெறாத குடும்ப அட்டைதாரர்கள் 06.07.2017 முதல் 13.07.2017 வரை உங்களுக்கான நியாய விலைக் கடையில் நடைபெறவுள்ள சிறப்பு முகாமில் நியாய விலைக் கடை விற்பனையாளரிடம் ஆதார் அட்டை இணைத்து கொள்ளவும், குடும்பத் தலைவர் அல்லது குடும்பத் தலைவயின் புகைப்படம் உடனடியாக நேரில் அளிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் அனைவரையும் மேற்படி சிறப்பு முகாமினை பயனுள்ளவாறு பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு முகாமில் கலந்துகொள்ள இயலாதவர்கள் தங்களது ஆதார் எண்ணையும், குடும்பத் தலைவரின் புகைப்படத்தினையும் உங்கள் குடும்ப அட்டை எண்ணுடன்

www.tnpds.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாகவோ அல்லது TNEPDS என்ற மொபைல் செயலி மூலமாகவோ நீங்களே இணைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. ஆதார் எண் இணைக்கும் பணி மற்றும் குடும்பத்தலைவர் அல்லது குடும்பத்தலைவி புகைப்படம் பதிவேற்றம் செய்யும் பணியினை நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் மூலமாகவோ அல்லது நீங்களாகவோ 13.07.2017க்கு முன் செய்து முடித்து மின்னணு குடும்ப அட்டை முழுமையாக இம்மாதத்திற்குள் பெற்றிட உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-பா.பொன்னையா
மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

/உத்தரவின்படி/

மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்பு அலுவலர், காஞ்சிபுரம்